ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2022/7 - 2017 ජූනි මස 06 වැනි අඟහරුවාදා - 2017.06.06

*2022/7 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 06 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்*

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, நிதி மற்றும் வெகுவன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்ட இனம் தொடர்பில், அட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன். இக்கட்டளை 2017, யூன் மாதம் 06 ஆந் திகதி தொடக்கம் தொடங்குகின்ற 6 மாத காலப்பகுதியொன்றுக்கு, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, செல்லுபடியுடையதாதல் வேண்டும்.*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான 2016.12.20 ஆந் திகதிய 1998/5 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி மற்றும் 2017.03.07 ஆந் திகதிய 2009/5 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சீனி (எச். எஸ். தலைப்பு 17.01) சம்பந்தமான உத்தரவு மற்றும் 2016.12.09 ஆந் திகதிய 1996/50 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மாஜரின் (எச். எஸ். குறியீட்டு இல. 1517.10.30 மற்றும் 1517.10.90) சம்பந்தமான உத்தரவு 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 06 ஆந் திகதியிலிருந்து இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.*

*மங்கள சமரவீர,*
*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.*

*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2017, யூன் 05.*



இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

| I ஆம் நிரல் | | | | II ஆம் நிரல் |
|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| இல. | எச்.எஸ். தலைப்பு | எச்.எஸ். குறியீடு | விவரணம் | |
| 1. | 15.17 | 1517.10.30 | மாஜரின் 80% அல்லது அதற்கு மேற்பட்ட கொழுப்புகளுடன் | கி. கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 215.00 |
| | | 1517.10.90 | பிற | கி. கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 315.00 |
| 2. | 17.01 | | கரும்பு வெல்லம் அல்லது பீற் வெல்லமும் இரசாயன முறையில் சுத்தமான (சுக்கோறோஸ்) வெல்லமும் திண்மையான உருவில் | |
| | | | பதனிடப்படாத சீனி, மேலதிக மணமூட்டப்படாத வையும், நிற மூட்டப்படாதவையும் | |
| | | 1701.12 | பீற் சீனி | கி. கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 25.00 |
| | | 1701.13 | கரும்பு சீனி | கி. கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 25.00 |
| | | 1701.14 | பிற கரும்பு சீனி | கி. கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 25.00 |
| | | | பிற | |
| | | 1701.91 | மேலதிக மணமூட்டப்பட்டவை நிறமூட்டப்பட்டவை | |
| | | 1701.91.10 | சீனி | கி. கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 25.00 |
| | | 1701.91.90 | பிற | கி. கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 25.00 |
| | | 1701.99 | பிற | |
| | | 1701.99.10 | வெள்ளைப் பளிங்குருவான கரும்பு சீனி | கி. கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 23.00 |
| | | 1701.99.20 | வெள்ளைப் பளிங்குருவான பீற் சீனி | கி. கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 23.00 |
| | | 1701.99.30 | பிற சீனி | கி. கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 25.00 |
| | | 1701.99.90 | பிற | கி. கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 25.00 |

6 - 827

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.